8 பாடம்

# ஓர் அழகிய வீடு

***நம் நாட்டிலுள்ள அழகான தாஜ்மஹாலைப் பார்க்க, அயல் நாட்டிலும் இருந்து அநேகர் வருகிறார்கள். ஆனாலும் அந்தத் தாஜ் மஹாலைக் காட்டிலும், சாலொமோன் ராஜா தேவனுக்காகக் கட்டிய ஆலயம் மிகமிக அழகாக இருந்தது.***

சாலொமோனின் தகப்பனாகிய தாவீது ராஜா தேவனுக்கு ஓர் அழகிய ஆலயம் கட்டத் தீர்மானித்தார். ஆனால் தேவன், தாவீது ராஜாவிடம், "நீ எனக்கு ஆலயத்தைக்கட்ட வேண்டாம்; உன் மகனாகிய சாலொமோன் கட்டட்டும்' என்று சொன்னார். ஆனாலும் தாவீது ராஜா தேவனிடம் அனுமதி பெற்று, தேவனுடைய ஆலயக் கட்டுமானப் பணிக்குத் தேவையான பொருட்களையெல்லாம் மிகுதியாகச் சேகரித்துவைத்தார்.

தாவீது ராஜா வயதாகி இறந்துவிடவே, அவரது மகனாகிய சாலொமோன் ராஜாவானார். ராஜாவாகி 4 வருடங்கள் கழிந்த பின்னர் தேவாலயம் கட்டுவதற்குத் தீர்மானித்தார். எனவே, தனது அப்பாவான தாவீது ராஜாவிற்கு நண்பரும், தீருநாட்டின் ராஜாவுமாகிய ஈராம் என்பவருக்குக் கடிதம் ஒன்றை சாலொமோன் ராஜா எழுதி அனுப்பினார்.

அந்தக் கடிதத்தில் அவர், 'உமது நண்பராகிய எனது அப்பா தாவீது, தேவனுக்கு ஆலயம் கட்ட மிகவும் ஆசையாயிருந்தார். ஆனால், தேவன் அனுமதிக்கவில்லை. ஆலயத்தை நான் கட்ட வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளார். ஆதலால், லீபனோனில் எனக்காகக் கேதுரு மரங்களை வெட்டக் கட்டளையிடும். மரவெட்டு வேலைகளில் உம்முடைய வேலையாட்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். எனவே, உம்முடைய வேலை



## மனன வசனம்

**சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்.**
**சங்கீதம் 84:1.**

யாட்களை என் வேலையாட்களுக்கு உதவக் கட்டளையிடும். அவர்களுக்குரிய சம்பளத்தை நான் கொடுத்து விடுகிறேன்' என்று எழுதினார்.

சாலொமோனின் கடிதம் கண்டு தீரு ராஜா ஈராம் மகிழ்ச்சியடைந்தார். சாலொமோன் கேட்டுக்கொண்டபடியே உதவ விரும்பினார். எனவே, சாலொமோனிடத்தில் தனது ஆட்கள்மூலம் தான் உதவுவதாகச் சொல்லி அனுப்பினார். அப்படியே சாலொமோன் கேட்டபடி ஏராளமான கேதுரு மரங்களையும் கொடுத்தார்.

மேலும் தீரு ராஜாவாகிய ஈராம் தான் சொன்னபடியே, தேவாலய வேலைகளுக்காக ஈராம் எனும் பெயருள்ள ஒருவனை எருசலேமுக்கு அனுப்பினார். இவன் சகலவித வெண்கல வேலையையும் செய்யத்தக்க யுக்தியும் புத்தியும் அறிவும் உள்ளவனாயிருந்தான். தேவ ஆலயப் பணிக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிகவும் அருமையாகச் செய்தான்.

லீபனோன் மரவெட்டு வேலைக்காக 30,000 பேர், சுமைசுமக்க 70,000 பேர், மலைகளில் மரம் வெட்ட 80,000 பேர், வேலையை விசாரிக்கும் விசாரிப்புக்காரர்கள் 3,300 பேர் என்று ஏராளமான ஆட்களை தேவாலயக் கட்டுமானப் பணிக்காக சாலொமோன் ஏற்படுத்தியிருந்தார்.

மேலும் ஆலயத்துக்குத் தேவையான கற்கள் முன்னரே பணி தீர்ந்துகொண்டுவரப்பட்ட கற்களாக இருந்தது. எனவே ஆலயம் கட்டப்படுகையில் சுத்தியல்கள் மற்றும் எவ்விதமான இரும்புக் கருவிகளின் சத்தமும் கேட்கப்படவில்லை. இவ்விதமாகச் செய்து தேவனைக் கனப்படுத்தினர்.



## செய்தி

**தேவனுடைய ஆலயத்தை நான் மதிக்கும்போது, தேவனை நான் தொழுகிறேன்.**

இந்தப் பூமியிலேயே மிகவும் அழகான ஒரு கட்டடமாக ஆலயம் விளங்கியது. ஆலயத்தின் உட்புறச்சுவர் தெரியாதபடி மரவேலைப்பாடுகளால் மூடப்பட்டது. ஆலயத்தின் உட்புறத்தின் அநேக பகுதிகளைப் பொன்தகட்டால் மூடினார்.

ஆலயத்தின் பாத்திரங்களும் வெண்கலத்தொட்டி, பலிபீடம், தூபபீடம், குத்துவிளக்கு, உடன்படிக்கைப் பெட்டி முதலானவைகளும் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன. வானாதி வானங்களும் கொள்ளக்கூடாத தேவன் தம் மக்கள்மேல் வைத்த அன்பினால், அவர்கள் நடுவே தங்க விருப்பங்கொண்டார்.

என் பிரியமே! உன் உள்ளத்தில் இயேசு தங்குவதற்கு இடம் கொடுப்பாயா?

*செய்முறை:* **1இராஜாக்கள் 6:15,23 ஆகிய வசனங்களை நன்கு படி. தேவனுடைய ஆலயத்தைக் கட்டப் பயன்படுத்தப்பட்ட மரங்கள் அவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன. பின்னர் கீழே மாறிக்கிடக்கும் எழுத்துகளை ஒழுங்காக்கி, மரங்களின் பெயர்களைக் கோடுகளில் எழுது.**

**ரு கே து** ____________________

**தா வ தே ரி** ____________________

**ம் ர ம வ லி ஒ** ____________________



